கொவன்றி தமிழர் நலன்புரிச் சங்கம்
Coventry Tamil Welfare Association

http:// HYPERLINK http://www.tamils.org.uk
www.tamils.org.uk
Email: coventrytamils2002@gmail.com
Mobile no:- 07823535094
தலைவர்:- சிவத்தமிழ் காவலன் க.அரியரத்தினம்.

கார்த்திகை மாத இதழ்
NEWS BULLETIN
NOVEMBER 2025
ஆக்கம்:- ஸ்ரீ.பகீரதன்

நாள்	நிகழ்வு
	கொவன்றி தமிழ்மொழிக் கலைக் கழகம் சனி மற்றும் ஞாயிற்றுக் கிழமைகளில் 45 BLONDVIL ST COVENTRY CV3 5EQ எனும் முகவரியில் நடைபெறுகின்றது
06/12	ஆண்டு விழா
20/12/25	ஒளிவிழா
21/12/25	நத்தார் விடுமுறை ஆரம்பம்
03/01/26	இரண்டாம் தவணை ஆரம்பம்

SATURDAY	Time
Tamil	9.45am-12.30pm
Free Karate (Mr. Prathith Piries)	12.30pm – 2.30pm
Keyboard (Miss. Tiffany Lawrance)	12.30pm – 2.30pm
Vocal (Carnatic) (Mr. Dheenadayalan Pathmanathan)	12.30pm – 2.30pm
Bharathanatiyam (Mrs. Ajantha Kandeepan)	1.00pm – 5.00pm
Free 11plus Verbal & Nonverbal (Mrs. Gayathri Kirish)	2.00pm – 4.00pm
SUNDAY	**Time**
Bharathanatiyam (Mrs. Sathyagowri Jeyaseelan)	11.00am – 3.00pm
Vocal (Carnatic) (Mrs. Vanathy Sureskumar)	9.00am – 1.00pm
Bharathanatiyam (Mrs. Ajantha Kandeepan)	11.30am –12.30pm
Miruthangam (Mr.Wijayarajah Mayilvaganam)	10.00am – 2.00pm
Violin&Veena (Miss. Varani Saravanathasan)	9.00am – 2.00pm
Keyboard (Miss. Tiffany Lawrance)	12.30pm – 2.30pm
Tamil	11.30am –12.30pm
Free Yoga Class (அருள்நிதி. Gowrisankar Devaraj)	10.00am –12.00am
Free 11plus Maths (Mr.Krish)	9.00am – 11.00am



மாவீரர் நினைவேந்தல்.

கொவன்றி தமிழர் நலன்புரிச் சங்கத்தின் தமிழ்ப் பாடசாலையான கொவன்றி தமிழ்மொழிக் கலைக்கழகத்தில் மாவீரர் நினைவேந்தல் 22/11/2025 அன்று மிகவும் உணர்வுபூர்வமாக நடைபெற்றது.





கொவன்றி தமிழர் நலன்புரிச் சங்கத்தின் தலைவர் திரு கந்தையா அரியரத்தினம் ஐயா, பொருளாளர் திரு பத்மநாதன் ஆலவன், விளையாட்டு இணைப்பாளர் திருமதி விஜிதா ரவீந்திரன் ஆகியோர் மாவீரர் பற்றிய கருத்துரைகளை வழங்கியிருந்தனர்.





கொவன்றி தமிழ்மொழிக் கலைக்கழக சங்கீத ஆசிரியர்களில் ஒருவரான “சங்கீதகலாநிபுண” “இசைவாணர்” “கானகலாதர” திரு பத்மநாதன் தீனதயாளன் ஆசிரியரின் மாணவர்கள் செல்வன் ரெதுஷன் ரவீந்திரன், செல்வன் லக்ஸன் திருவரங்கன் ஆகியோர் மாவீரர் பாடலை வழங்கியிருந்தனர்.



பெற்றோர் கலந்துரையாடல்

ஆண்டுவிழா தொடர்பான பெற்றோர் கலந்துரையாடல் 01/11/2025 அன்று Meadow Park School ல் நடைபெற்றது.



கராத்தே சுற்றுப் போட்டி

30/11/2025 அன்று Tolworth Recreational Sports Centre ல் British Academy of Shotokan karate நடாத்திய BASK GRASSROOTS 2025 போட்டியில், கொவன்றி தமிழ்மொழிக் கலைக்கழக கராத்தே ஆசிரியர் திரு பிரதித் பீரிஸ் அவர்களின் மாணவர்கள் கலந்து கொண்டதோடு, செல்வன் அர்ஷென் விசயரூபன், செல்வன் ருஷாந் பீரிஸ், செல்வன் கவிசன் மயூரன், செல்வன் ஜகிதன் நிகேதன் ஆகியோர் போட்டிகளில் சிறப்பான முறையில் வெற்றியீட்டிப் பதக்கங்களைத் தமதாக்கினார்கள். கராத்தே ஆசிரியருக்கும், மாணவர்களுக்கும் கொவன்றி தமிழர் நலன்புரிச் சங்கம் தனது பாராட்டுக்களையும், மனமார்ந்த வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றது. ஒவ்வொரு ஆண்டும் இந்தப் போட்டியில் கலந்துகொண்டு வெற்றிபெறுவது குறிப்பிடத்தக்கது.



தமிழ்மேல் அவாக் கொண்ட சிவா பிள்ளை அவர்கள்

தமிழ் மொழியில் கொண்ட காதலால், தன் வாழ்நாளையே அர்ப்பணித்த தமிழறிஞர், கணனி வல்லுநர் சிவா பிள்ளை என அழைக்கப்படும் அமரர் கணபதிப்பிள்ளை சிவகுருநாதபிள்ளை அவர்களின் திடீர் மறைவு தமிழினத்துக்குப் பெரும் இழப்பாகும்.

யாழ்ப்பாணம் கட்டைப்பிராயை பிறப்பிடமாகக் கொண்ட அவர், கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி மற்றும் யாழ். இந்துக் கல்லூரியின் பழைய மாணவராகவும், 1960களில் பொறியியல் துறையில் லண்டன் வந்து தன்னை நிலைநிறுத்திக் கொண்டவராகவும், லண்டன் தமிழ்ச் சமூகத்தில் சைவம், தமிழ், பண்பாடு வளர்க்க மறக்க முடியாத பல தொண்டுகளைச் செய்து வந்தவராகவும் விளங்கினார்.



உலக அரங்கில் தமிழர்களின் பெருமையை போற்றும் அமைப்பான நக்கீரர் தமிழ்ச் சங்கம் லண்டன் சிவா பிள்ளை அவர்களின் 60 ஆண்டு தமிழ்ச் சேவையைப் பாராட்டி “**இராசராச சோழன் விருது**” வழங்கிக் கௌரவித்தது. புதவைத் தமிழ்ச் சங்கம், நக்கீரர் தமிழ்ச் சங்கம் ஆகியவற்றின் முயற்சியால் இராசராச சோழன் 1040ஆவது சதய விழா புதுச்சேரியில் தமிழ்ச் சங்க அரங்கில் சிறப்பாக நடைபெற்றது.

இவ்விழாவில் தமிழ்ச் சான்றோர்கள் முன்னிலையில் லண்டன் சிவா பிள்ளை ஐயா அவர்களுக்குப் பாராட்டு விழாவும் நடைபெற்றது.



அதனைத் தொடர்ந்து, கம்போடியாவில் நடைபெற்ற "கடாரம் கொண்டான் இராசேந்திர சோழன்" என்ற வெற்றியைக் கொண்டாடும் மாநாட்டில் கலந்துகொண்டிருந்த போது, மாரடைப்பால் தமிழோடும், தமிழர் நெஞ்சங்களோடும் இரண்டறக் கலந்துவிட்டார்.





சென்று வாருங்கள் சிவா பிள்ளை ஐயா

தமிழுக்காகத் தன்னை அர்ப்பணித்து
ஓய்வின்றி உழைத்த ஒரு ஆத்மா
ஓய்வு எடுத்துவிட்டது.

வெள்ளை வேட்டியில் கள்ளங் கபடமற்ற
சிரிப்போடு உலா வந்த
உருவம் மறைந்து விட்டது.

இந்த உண்மையை எம்மால்
ஏற்றுக் கொள்ள முடியவில்லை!

தமிழ் மொழியால் எமக்குள் ஏற்பட்ட
உறவும் நெருக்கமும் மிகவும் அதிகம்.

பண்போடு வயது வேறுபாடின்றி அன்போடு
அனைவரையும் அரவணைக்கும் ஒரு உறவு.

எத்தனை சபைகள், எத்தனை விருதுகள்,
எத்தனை விழா மேடைகள், எத்தனை
அறிமுகங்கள் கிடைத்த போதும்,
அத்தனையும் கண்டு இவர் அகங்காரம்
கொள்ளவில்லை.

அதிகாரத்தோடு கூட யாரையும்
அணுகியதில்லை.

எத்தனை அடக்கம்! எத்தனை பணிவு!
அமைதியே அறிவின் அடிப்படை
இவரில் கண்டது.

இவர் எங்களை அன்போடு
நலம் விசாரிக்கும் போது, மனம்
வானுக்கும் பூமிக்கும் தாவிக் குதிக்கும்.

எங்கு நிகழ்வுகள் என்றாலும்,
எத்தனை மைல்கள் தொலைவில் என்றாலும்
இத்தனை மணிக்கு வருவேன் என்பவர்

இனி எப்போது வருவார்?

பிரித்தானியவில் தமிழை மீண்டும் OCR ற்குள்
கொண்டு செல்லவேண்டும் என்ற தீராத ஆசை!
பலநாள் கனவு!

அதற்கான வழிகளைப் பற்றிய
ஆழமான யோசனை – அது

நிறைவேறும் முன்னே நீங்கள்
நீண்டதூரம் சென்றுவிட்டீர்கள்.

உங்கள் நினவுகள் தமிழோடும்,
தமிழர் நெஞ்சங்களோடும் கலந்திருக்கட்டும்.

உங்கள் ஆத்மா சாந்தியடையப்
பிரார்த்திக்கின்றோம்.

சென்று வாருங்கள் சிவா பிள்ளை ஐயா!

ஈழத்து இலக்கியம் (பாகம் 33)

(கடந்த இதழின் தொடர்ச்சி ...)

கடந்த இதழிலே யாழ்ப்பாணம் நல்லைநகர் ஆறுமுகநாவலர் பற்றி பார்த்திருந்தோம் அதன்பொடர்ச்சியை இப்போது காண்போம்.

ஆறுமுகநாவலர் பைபிளை மொழி பெயர்த்து வெளியிட்டமையால் மிக சிறப்பான மொழிநடை கொண்டவர் எனப் பராட்டைப் பெற்றவர்.

அதே நேரத்தில் "ஆறுமுகம்" கிறிஸ்தவராக மாறிவிட்டதாக பிரசாரம் செய்ய தொடங்கியதால்;தாம் ஓர் சைவத்தமிழன் என்பதை நிரூபிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. அதனால் கிறிஸ்தவமத கண்டனங்களை எழுதிவெளியிட்டார். அதன் தாக்கத்தால் தமிழ் மொழிக்கல்வியை புகட்ட வேண்டிய நிலை ஏற்பட்டது.

பீற்றர் பெர்சிவல் அவர்களின் ஆங்கிலப் பாடசாலையில் கற்பிக்கும் நேரத்திலேயே மாலை நேரப்படசாலை ஒன்றைத்தொடங்கி தமிழும் சைவமும் கற்பிக்கத் தொடங்கினார். இப்பாடசாலையில் கற்றவர்களில் சதாசிவம்பிள்ளை, நடராசையர், விசுவநாதையர், ஆறுமுகம்பிள்ளை, கந்தசுவாமிப்பிள்ளை, ஆறுமுகம் செட்டியார் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்களில் சதாசிவம் பிள்ளையே நாவலரின் தரும நிலைகளைப் பரிபாலனம் செய்துவந்தார்.

இவர்களின் பின் இவரிடம் கற்றவர்கள் வித்துவசிரோமணி ச.பொன்னம்பலப் பிள்ளையும், மா.வைத்திலிங்கம்பிள்ளை முதலானோராகும். இவர்களில் ச. பொன்னம்பலப்பிள்ளையே இலங்கையிலும், இந்தியாவில் பெயர் பெற்றவர். இக்காலகட்டத்தில் யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணையிலும், இந்தியா சிதம்பரத்திலும் சைவப்பிரகாச வித்தியா சாலைகளை நிறுவினார்.

வண்ணார்பண்ணை சைவப்பிரகாச வித்தியாசாலையில் வைத்திலிங்கம்பிள்ளை தலைமை ஆசிரியராக இருந்தார். சிதம்பரத்தில் நிறுவப்பட்ட சைவபிரகாச வித்தியாசாலையில் சா .பொன்னப்பளபிள்ளை கடமையாற்றினார். யாழ்ப்பாணத்தில் கிறிஸ்தவ மத பாதிரிகளின் பிரசாரத்தால் கிறிஸ்தவமதம் வேகமாகப் பரவியது. இதனால் சைவத்தை மக்களிடையே எடுத்துச் செல்ல வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. அதற்காகச் சைவசித்தாந்த நூல்களையும் கற்றுத் தேர்ந்து, சைவ பிரசாரங்களை மேற்கொண்டார். இவரது முதல் பிரசங்கம் வண்ணார்பண்ணை சிவன் கோவில் வசந்த மண்டபத்தில் நடந்தது. அறிஞர்களும் சைவப் பெருமக்களும் விதந்து பாராட்டினர். தன்னுடன் பிரசங்கங்கள் செய்ய நல்லூர் வேங்கடபதி ஐயரின் மகன் கார்த்திகேய ஐயரை நியமித்து; தாம் ஒருவாரமும், ஐயர் மறுவாரமும் ஆகத் தொடர் பிரசங்கம் நடத்தினார். இவர்களது சொற்பொழிவு மிகவும் பிரபலம் அடைந்தது. கிறிஸ்தவ மதத்திற்கு மாறிய பாலும் மீண்டும் சைவத்திற்கு திரும்பியது இவரது சாதனையே.

(அடுத்த வாரம் தொடரும்)

ஆக்கம்
திரு மாணிக்கம் தவத்துரை ஆசிரியர்



கார்த்திகை விளக்கீடு/கார்த்திகைத் தீபம்

படைத்தல் தொழிலைச் செய்யும் பிரம்மனும், காத்தல் தொழிலைச் செய்யும் விஷ்ணுவும் நானே பெரியவன் என்று வாதாடிப் பல ஆண்டுகள் போரிட்டனர். சிவபெருமான் சோதிப் பிழம்பாகத் தோன்றினார். அடியையும் முடியையும் தேடும்படி அசரீரி கூறியது. இருவரும் அடிமுடி தேடிக் காணமுடியாமல் சிவபெருமானே முழுமுதற் கடவுள் என்று ஏற்றுக்கொண்டனர். அவர்கள் இருவரும் தாம் கண்ட சோதியை எல்லோரும் காணும்படி காட்டியருள வேண்டும் என்று விண்ணப்பிக்க, அவர் திருக்கார்த்திகை நாளன்று காட்டியருளினார். இந்தத் தத்துவத்தை விளக்குவதே கார்த்திகை விளக்கீடு ஆகும்.